# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF IV ADDITIONAL CITY CIVIL COURT,

## CHENNAI-600 104.

## O.S.No.3136/2019

## Deposition of witness for DW-1

| | | |
|---|---|---|
| பெயர் | : A.Sridhar | 04.02.2026 |
| தந்தை பெயர் | : B.Arunachalam | |
| முகவரி | : No.164, C.V.Raman Street, Alwathiru Nagar, Chennai 600 087 | |
| வயது | : 57 years. | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day February of 2026 .

---

**04.02.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**DW1 – வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் மற்றும் 2ம் பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள Ex.B1 ஆவணத்தில் Proprietor என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் Proprietor என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் Partner என்று தான் குறிப்பிட வேண்டும். நான் தான் மெல்லிசை என்ற திரைப்படத்தை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. ஆனால் திரைப்படங்களை தமிழ்நாடு முழுவதும் திரையிடுவதற்கு உரிமையை நான் பெற்றிருந்தேன். அந்தப் படம் சம்பந்தமாக நான் வாதியிடம் கடன் பெற்றது உண்மைதான். நான் வாதியிடம் ரூபாய் ஒரு கோடியே 10 லட்சம் கடனாக பெற்றேன் என்றால் சரியல்ல. நான் Rs.50,00,000/-த்தை Demand Draft ஆகவும், ரூபாய் Rs.10,00,000/-த்தை ரொக்கமாகவும் வாதியிடம் இருந்து பெற்றுக் கொண்டேன். நான் வாதியிடமிருந்து ரூபாய் ஒரு கோடியே 10 லட்சத்தை தான் கடனாக பெற்று இருக்கிறேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக

தவறாக Rs.60,00,000/–த்தை பெற்றதாக பொய்யாக கூறுகிறேன் என்று சரியல்ல. குறிப்பிட்ட Financial காரணங்களுக்காக அந்த மெல்லிசை என்ற படமானது வெளியிடப்படவில்லை என்றால் சரிதான். அது என்னுடைய தவறு இல்லை. தயாரிப்பாளரின் தவறுதான். அந்த மெல்லிசை என்ற படமானது திரையிடப்படாததால் எனக்கு அந்த படம் வேண்டாம் என்று கூறிவிட்டேன். அதனால் தயாரிப்பாளர் எனக்கு பணத்தை திருப்பி தர வேண்டும். ஆனால் தயாரிப்பாளர் அந்தப் படத்தை JSK என்ற திரைப்பட நிறுவனத்திற்கு அந்த படத்தை மொத்தமாக விற்று விட்டார். அந்த JSK நிறுவனம் வாதி விஜய் கோத்தாரி என்பவருக்கு நான் கொடுக்க வேண்டிய பணத்தை திருப்பிக் கொடுத்துவிட்டு எனக்கு Clearance Certificate ரவி பிரசாத் லேபுக்கு கொடுத்து விட்டார். அதன்படி வாதி விஜய் கோத்தாரிக்கு நான் கொடுக்க வேண்டிய தொகை முழுவதையும் கொடுத்து விட்டதால் தான் அவர் Clearance Certificate யை கொடுத்திருக்கிறார். அதன்படி நான் எந்த தொகையையும் வாதிக்கு தர வேண்டியது இல்லை.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

//SD//

IV Addl. Sessions Judge.
04.02.2026 IV Additional Court.